## சாதாரணக் கூட்டம் அறிவிப்பு

கூட்ட எண் – 01/ 2022 ஆரணி நகராட்சி,

நாள்: 07.04.2022

நிகழும் பிலவ ஆண்டு, பங்குனி – 24, திருவள்ளுவர் ஆண்டு 2052 நாள்.07.04.2022 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆரணி நகராட்சி அலுவலகம் பேரறிஞர் அண்ணா மன்றத்தில் நடைபெறவுள்ள சாதாரணக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திருக்குறள்**

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்

அதிகாரம் 55(547)

## <u>பொருள்கள்</u>

1. அ)நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச்–2022 மாதக்குறிப்பு

ஆ)நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச்–2022 மாதக்குறிப்பு

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**2.** தமிழகத்தில் நடைபெற்ற 16வது சட்டமன்ற பொதுத்தேர்தலில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை, தமிழ்நாட்டின் முதலமைச்சராக அமர்த்திய வாக்காள பெருமக்களுக்கு இந்நகர மன்றம் உள்ளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தலை சிறப்பாக நடத்தி உள்ளாட்சி மன்றங்கள் சிறப்பாக செயல்படுவதற்கு வழி வகை செய்து ஆரணி நகராட்சியில் ஆறு ஆண்டுகளுக்கு பிறகு மக்கள் மன்றம் செயல்பட வழி நடத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு நகர்ப்புற உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களுக்கும், இம்மன்றத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் ஆரணி நகரின் வளர்ச்சிக்காக கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள ரூ.86.12 இலட்சம் ஒதுக்கீடு செய்து உத்திரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இந்நகர மன்றம் உள்ளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

**3.** நகரமன்ற கூடத்தில் முன்னாள் தமிழக முதல்வர் மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திரு உருவப்படத்தையும், தற்போது முதல்வராக இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் உருவப்படத்தையும் அரசு விதிகளுக்கு உட்பட்டு நகரமன்ற கூடத்தில் நகரமன்ற தலைவர் அவர்கள் திறந்து வைப்பதென நகரமன்ற தலைவர் அவர்களால் தனி தீர்மானம் கொண்டுவரப்படுகிறது.

**4.** ஆரணி நகராட்சி அலுவலக கட்டிடத்தில் "தமிழ் வாழ்க" மற்றும் "ஆரணி நகராட்சி அலுவலகம்" ஆகிய இரண்டு பெயர் பலகை புதியதாக பொருத்த தோராய செலவினம் ரூ. 1.00/– இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) வழங்க மன்றம் அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு**:– மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண்.434/இ1/2022)

**5.** அரசானை (நிலை) எண்.92 நாள் 02.07.2007 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை இதனை அடிப்படையாக கொண்டு வாடகை நிர்ணயம் செய்யாமல் கடந்த ஆட்சியில் பல மடங்கு வாடகையை உயர்த்தியுள்ளனர். இதனால் நகராட்சி கடைகளுக்கு, அருகே உள்ள தனியார் கடைகளை விட பல மடங்கு உயர்த்தியுள்ளனர். அதே போல் தரை தளத்தில் உள்ள கடைகளின் வாடகை அளவிற்கே மாடியில் உள்ள கடைகளையும், அதிக வியாபாரம் நடைபெறும் முன்பக்க கடைகளின் வாடகை அளவிற்கே பின்புறம், ஒதுக்குபுறமாக உள்ள கடைகளின் வாடகை உயர்த்தப்பட்டுள்ளது.

இதனால் மாடியில் உள்ள கடைகள், ஒதுக்குபுறமாக உள்ள கடைகள் காலியாக உள்ளன. இதனால் நகராட்சியின் வருமானம் குறைந்ததோடு அல்லாமல் பராமரிப்பு இல்லாமல் கடைகளும் பாழ்படுகிறது . இதனை தவிர்க்க மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையிலான அரசு அரசானையில் கூறியுள்ள படி அங்காடி மதிப்பு அடிப்படையில் நகராட்சி கடைகளை ஒட்டியுள்ள தனியார் கடைகளின் வாடகை அளவிற்கே நகராட்சி கடைகளின் வாடகை நிர்ணயம் செய்து நகராட்சியின் வருமானம் உயரவும் வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்கவும் முறைப்படுத்தி பரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் , மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நகராட்சி நிர்வாகத்துறை செயலர் அவர்களுக்கும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களுக்கும் மன்றத்தின் கோரிக்கையை அனுப்பி வைக்கலாம்.

**அலுவலக குறிப்பு:–** நகராட்சி இயக்குநர் சென்னை அவர்களின் வழியாக தமிழக அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கலாம்.

**6.** ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் **1** முதல் **33** வரை உள்ள வார்டுகளில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் தடையின்றி வழங்கிட ஏதுவாக குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.**9.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2.மேற்காணும் பணியினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.400/இ1/2022)

**7.** ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின் விளக்குகள் மின் உகரணங்கள் கையிருப்பு மிகவும் குறைவாக உள்ளதாலும், எரியாத தெருவிளக்குகளை உடனுக்குடன் மாற்ற வேண்டியுள்ளதாலும் உடன் ஒப்பந்தப்புள்ளி கோரி தெருவிளக்கு மின் உபகரணங்கள் வாங்க தோராய செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** 1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2.மேற்காணும் பணியினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.300/இ1/2022)

**8.** ஆரணி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் வாகனம் TN – 25V–4633, TN – 25V–4635, TN–25BY 7803 ஆகியவற்றிற்கு 2022 – 2023ம் ஆண்டிற்கு சாலைவரி, பசுமை வரி, சேவை வரி ஆகியவை ரூ.21,600/–செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். அவசரம் அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண்: 634/2016/எச

**9.** ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் ACE ஆட்டோவிற்கு 25/03/2022ந் தேதியோடு இன்சூரன்ஸ் முடிவடைகிறது. அவை மேலும் ஒரு ஆண்டிற்கு புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு கீழ்க்கண்டவாறு தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. TN–97 1833 | – | ரூ. 19890 |
| 2. TN–97 1839 | – | ரூ. 19890 |
| 3. TN–97 1856 | – | ரூ. 19890 |
| **மொத்தம்** | – | **ரூ. 59670** |

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். 634/2016/எச்1)

**10.** ஆரணி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 100 சதவீதம் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சியாக பிரகனப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு பொது மக்களிடம் கருத்து மற்றும் ஆட்சேபனைகள் கேட்கவும். மேலும் இந்நகராட்சியில் குப்பையில்லா நகராட்சியாக மாற்றி மத்திய அரசால் (MOUD) வழங்கப்படும் 3 நட்சத்திரம் அங்கீகாரம் (3 STAR RATING) பெற சுய உறுதிமொழி பெற மக்களிடம் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துக்கள் பெற 02/03/2022 அன்று தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணம் ரூ.15624/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்காணும் பணியினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண். 3419/2018/எச்–1)

<u>ஆரணி நகராட்சி</u>
<u>சாதாரணக் கூட்டம்</u>

2022–ம் ஆண்டு மார்ச் மாதம் 07.04.2022 –ந்தேதி வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

| வ.எண். | பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 1 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 2 | 2 | 2 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 3 | 3 | 3 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 4 | 4 | 4 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 5 | 5 | 5 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 6 | 6 | 6 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 7 | 7 | 7 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 8 | 8 | 8 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 9 | 9 | 9 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 10 | 10 | 10 | அனுமதி வழங்கப்படுகிறது. |

கூட்ட எண். 02 ஆரணி நகராட்சி

2022–2023ம் ஆண்டு நாள்: 08.04.2022

**அவசரக் கூட்டம் அறிவிப்பு**

2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ந் தேதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆரணி நகராட்சி அலுவலகம் பேரறிஞர் அண்ணா மன்றத்தில் நடைபெறும் நகரமன்ற அவசரக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகரமன்ற தலைவர்,
ஆரணி நகராட்சி.

**பொருள்கள்**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொத்துவரி:

குடியிருப்பு கட்டடங்கள்மண்டல அடிப்படை மதிப்பு கணக்கிடும் முறை

**(Residential Building)** :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| **<=600** | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 1.25 |
| **601-1200** | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 1.5 |
| **1201-1800** | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 1.75 |
| **>1800** | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் மண்டல அடிப்படை மதிப்பு கணக்கிடும் முறை

(**Non-Residential Building**) :

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு X 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் ஆரணி நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | ரூ.4.50 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | ரூ.2.70 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | ரூ.2.30 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | ரூ.6.42 |
| மொத்தம் | | ரூ.15.92 |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், ஆரணி நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

9) மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் நகர் மன்றத் தீர்மான எண் 150 நாள் 14.07.1998ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளதை மன்றம் ஏற்கலாம்.

10) மேலும் பொது மக்கள் அறியும் வண்ணம் குறுஞ்செய்தி, தினசரி செய்தித்தாள்களில் விளம்பரம் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும், சொத்துவரி பொது சீராய்வு படிவங்கள் அச்சடிக்கவும், மற்றும் இதர செலவினம் ரூ.5,00,000/- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
(கோப்பு எண்.434/2022/அ1)

நகரமன்ற தலைவர்,
ஆரணி நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள்:08.04.2022 .

# ஆரணி நகராட்சி
## அவரசக் கூட்டம்

2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08.04.2022–ந்தேதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவரசக்கூட்ட நடவடிக்கைகள்.

| வ.எண். | பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 11 | அனுமதி வழங்கப்படுகிறது. |